நாள்:. 05.03.2010

செ. வெ. எண்:. 209

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை

## செய்தி வெளியீடு – 5.3.2010

ஈரோடு மாவட்டம், காங்கேயம் மற்றும் வெள்ளக்கோயில் பகுதிகளில் தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் நிறுவனங்களில் தேங்காய் எண்ணெயுடன் பாமாயில் கலப்படம் செய்து விற்பதாக அரசுக்கு புகார் வந்தன. அதன் அடிப்படையில், திடீர் ஆய்வு செய்து, தவறு செய்யும் நிறுவனங்கள் மீது உணவு கலப்பட தடைச் சட்டத்தின்கீழ் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அறிவுறுத்தப்பட்டார். அரசு அறிவுறுத்தியதன் பேரில், பொது சுகாதாரத்துறை அலுவலர்கள் ஆறு குழுக்களாக 3.2.2010 அன்று காங்கேயம் பகுதியில் 25 தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் நிறுவனங்களிலும், வெள்ளக்கோயில் பகுதியில் 8 தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் நிறுவனங்களிலும் ஆய்வு செய்தனர். ஆய்வின் போது சந்தேகத்திற்கிடமான தேங்காய் எண்ணெய் தயாரிப்பு நிறுவனங்களிலிருந்து உணவு கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் உணவு மாதிரிகள் ஆய்விற்காக எடுக்கப்பட்டு, பரிசோதனை செய்யப்பட்டது. பரிசோதனையில், ஸ்ரீ மகேஸ்வரி ஆயில் மில், 367/1, சென்னிமலை ரோடு, காங்கேயம் எனும் நிறுவனம் தயாரிக்கும் தேங்காய் எண்ணெயில் கலப்படம் செய்யப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. இந்நிறுவனத்தின் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வி.கு. சுப்புராஜ்
அரசு முதன்மைச் செயலாளர்

வெளியீடு, இயக்குநர்:
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9